ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/27 - 2014 නොවැම්බර් මස 19 වැනි බදාදා - 2014.11.19

1889/27 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் ( திருத்தச் ) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 10/3/1/3/63.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2013/HW/445.

மாத்தளை, இழுக்கும்புர- லக்கல பாதையில் இல. 2/8 பாலம் (இரத்தொட முடிவு) வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

மத்திய மாகாணத்தில், மாத்தளை மாவட்டத்தில், இரத்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் மாத்தளை பல்லேசிய பத்துவ சிறுபிறிவில் கும்புரேகம்மெத்த கிராமத்தில் அமைந்துள்ள மாத்தளை நிலஅளவையாளர் அத்தியட்சகரால் தயாரிக்கப் பட்ட வரைபட இல. மா 1632 இல் காட்டப்பட்டுள்ள கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்.

**துண்டு இல.: 2**

காணியின் பெயர்: சுதுகங்க வத்த; காணியின் விபரம்: மைதானம்; உரிமையாளர்: திரு. எஸ். பீ. த. சில்வா, நதீ உயன, களுதாவளை, மாத்தளை; விஸ்தீரணம்: 0.0020 ஹெக்டயார்.

**துண்டு இல.: 4**

காணியின் பெயர்: சுதுகங்க வத்த; காணியின் விபரம்: மைதானம்; உரிமையாளர்: அரசு; விஸ்தீரணம்: 0.0168 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இரத்தோட்டை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப் படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங் களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக் கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு சனவரி 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

பி. எம். ஜீ. பி. விஜேபண்டார,
பிரதேச செயலாளர்,
இரத்தோட்டை,

பிரதேச செயலகம்,
இரத்தோட்டை,
2014, நவெம்பர் 15.

12-109

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.